**Dinakaran(Nagai & Thiruvarur)**
**Flood Relief 14-12-2010**

## ஈஷா யோக மையம்

# இலவச மருத்துவ சேவை

நாகை, டிச. 14: நாகை மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் கனமழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஈஷா யோக மையம் சார்பில் இலவச மருத்துவ சேவை அளிக்கப்படுகிறது.

திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, காட்டூர், எட்டுக்குடி, திருவாய்மூர் ஒன்றியங்களிலுள்ள சுமார் 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஈஷா யோக மையம் சார்பில் 2 நடமாடும் மருத்துவ ஊர்தி உதவியுடன் மருத்துவ சிகிச்சை மற்றும் இலவச மருந்துகள் வழங்கப்பட்டு வருகிறது.

மழைக்காலத்தில் பரவும் காய்ச்சல், சளி, இருமல், வயிற்றுப்போக்கு மற்றும் மலேரியா, டெங்கு போன்ற கொசுக்கள் மூலம் பரவக் கூடிய நோய்களில் இருந்து தற்காத்துக் கொள்ள பொது மக்களிடம் விழிப்புணர்வு பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் கிராம தலைவர்கள் மற்றும் சுகாதார அலுவலர்களை நேரில் சந்தித்து நோய் வராமல் தடுக்கும் வழிமுறைகள் பற்றி ஆலோசனை வழங்கப்பட்டு வருகிறது.